பாழடைந்தவற்றிலிருந்து மீட்பு

Redemption from the Ruins



20 Prayers for Restoration in Loss

இழப்பில் மறுசீரமைப்புக்கான 20 ஜெபங்கள்

These prayers were born in the long night of the soul— in seasons of hidden tears and unspoken grief, when rejection wore many faces: overqualified yet unwanted, unqualified yet burdened with vision, passed over, misunderstood, cast aside.

They rose from the crucible of countless small deaths— micro-wounds of daily despair, macro-shadows of loss and isolation, emotional tempests, spiritual wilderness, physical darkness that words fail to name.

Yet in the deepest valley, a whisper remained: “Thank You, Father.”

These letters to Heaven were penned not in triumph, but in trembling trust— raw, unpolished, honest before the Throne.

And now, by the mercy of the Father, in the Name of the Lord Jesus Christ, and through the fire of the Holy Spirit, these private cries are released as public light— that any fellow traveler in the shadows might find companionship on the road, and glimpse the dawn that always follows the darkest hour.

May every reader who opens these pages hear the same gentle voice that carried the writer: “You are not alone. I have heard every prayer. The morning comes.”

To the glory of the One God— Father, Son, and Holy Spirit— whose perfect Oneness turned my midnight into song.

Amen.

இந்த ஜெபங்கள் ஆத்துமாவின் நீண்ட இரவில் பிறந்தன— மறைந்த கண்ணீர்களும் பேசப்படாத துயரங்களும் நிறைந்த காலங்களில், நிராகரிப்பு பல முகங்களை அணிந்திருந்தபோது: அதிக தகுதியுடையவனாக இருந்தும் விரும்பப்படாதவன், குறைந்த தகுதியுடையவனாக இருந்தும் பார்வையால் சுமக்கப்பட்டவன், புறக்கணிக்கப்பட்டவன், தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவன், ஒதுக்கிவைக்கப்பட்டவன்.

அவை எண்ணற்ற சிறு மரணங்களின் உலையிலிருந்து எழுந்தன— தினசரி துயரத்தின் சிறு காயங்கள், இழப்பு மற்றும் தனிமையின் பெரிய நிழல்கள், உணர்ச்சிக் காற்றழுத்தங்கள், ஆவிக்குரிய பாலைவனங்கள், சொற்களால் விளக்க முடியாத உடல் இருள்.

ஆனால் ஆழ்ந்த பள்ளத்தாக்கிலும், ஒரு முணுமுணுப்பு இருந்தது: “நன்றி, பிதா.”

இந்த சொர்க்கத்திற்கான கடிதங்கள் வெற்றியில் எழுதப்படவில்லை, ஆனால் நடுங்கும் நம்பிக்கையில்— மூலமானவை, பளபளப்பற்றவை, சிங்காசனத்திற்கு முன் நேர்மையானவை.

இப்போது, பிதாவின் இரக்கத்தால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் தீயால், இந்த தனிப்பட்ட அழுகைகள் பொது ஒளியாக வெளியிடப்படுகின்றன— நிழல்களில் பயணிக்கும் எந்த சக பயணியும் பாதையில் தோழமையைக் காணட்டும், மிக இருண்ட மணிநேரத்திற்குப் பின்னர் எப்போதும் வரும் விடியலைப் பார்க்கட்டும்.

இந்த பக்கங்களைத் திறக்கும் ஒவ்வொரு வாசகனும் எழுத்தாளரைத் தாங்கிய அதே மென்மையான குரலைச் செவிமடுக்கட்டும்: “நீ தனியாக இல்லை. நான் ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்டேன். காலை வருகிறது.”

ஒரே கடவுளின் மகிமைக்காக— பிதா, மகன், பரிசுத்த ஆவி— அவருடைய சரியான ஒருமை என் நள்ளிரவை பாடலாக மாற்றியது.

ஆமென்.

13 AUG 2008

இறைவா, என் ஜெபங்கள் உமக்கு இன்பமாய் ஏற வேண்டும்
என் விண்ணப்பங்களெல்லாம் உமக்கு இன்பமாய் ஏற வேண்டும்
என் கேள்விகளெல்லாம் உம்மிடத்தில் கேட்கிறேன் பதில் தாருமே!
என் வேண்டுதல்களெல்லாம் உம்மிடத்தில் வைக்கிறேன் நிறைவேற்றும்!
என் வாயை விரிவாய்த் திறக்கின்றேன். அதை நிரப்பிடும்!
என் இச்சைகளையெல்லாம் என்னை விட்டு அகற்றிடும்
உமது பரிசுத்தமானவைகளையே எண்ணத்தில் வைத்திருக்கச் செய்யும்
என் பாதைகளை என்னை விட்டு அகற்றிடும்
உமது நீதியின் பாதைகளை எனக்கு காண்பித்து நடக்கப் பழக்கிடும்.
என் அழுக்குகளையெல்லாம் என்னை விட்டு அகற்றிடும்
நுரைவெள்ளையாக என்னை நீர் மாற்றிடும்
இயேசுவே உமது இரத்தத்தால் என்னை தூய்மைப்படுத்திடும்.
பரிசுத்த ஆவியானவரே உமது சத்தியத்தால் என்னை நிரப்பிடும்.
இயேசுவே உமது தூய்மையான அன்பால் என்னை நிரப்பிடும்.
என் இதயங்களையெல்லாம் மாற்றி பண்படுத்திடும்.
என் பண்பாடுகளையெல்லாம் அகற்றி பரலோக மனிதனாக்கிடும்.
என் கொடிய நீதிகளை அகற்றி சத்திய நீதியுள்ள இருதயம் தந்திடும்.
இறைவா, எதிரிகளை என்னை விட்டு அகற்றிப்போடும்.
தேவனே, உமது வல்லமையினால் என்னை நிரப்பி உபயோகப்படுத்திடும்.
சேனைகளோடே எழுந்து புறப்பட்டு போகச் செய்திடும்.
தேவதூதர்களோடே சேர்ந்து உம்மை ஆராதிக்கச் செய்திடும்.
தேசமெங்கிலும் இயேசுவின் நாமத்தை சொல்லி தீர்க்க
சேனைகளோடே கூட எழுந்து புறப்படச் செய்திடும்.
பாதாளம் செல்லும் மனிதர்களை தடுத்து திசைத்திருப்பச் செய்திடும்.
உம்மைப் புகழ்ந்துப் போற்றிப்பாடி மகிழ்ந்து ஆராதிக்கச் செய்திடும்.
அப்பா, உம்மை அப்பா என்றழைக்கும் பாக்கியம் எல்லோருக்கும் தந்திடும்
எல்லா ஜனங்களையும் உம் புத்திரர்களாக மாற்றிடும்.
எல்லா மனிதர்களையும் பரிசுத்த சந்ததிகளாக மாற்றிடும்.
எல்லா பாவ சாபங்களை ஜனத்தைவிட்டகற்றிடும்.
இருள் சூழ்ந்த பகுதிகளிலெல்லாம் வெளிச்சம் வரச் செய்திடும்.
சபையின் சத்தியங்களை எல்லோருக்கும் உணர்த்திடும்.
உம்முடைய இரகசியங்களை எல்லோருக்கும் தெரியப்படுத்திடும்.
உம்முடைய அன்பான கரங்களால் ஜனத்தை அணைத்திடும்.
உம்முடைய கிருபைகளின் மிகுதியால் உலகத்தை காத்திடும்.
அப்பா, என்னுடைய பயங்களையெல்லாம் அகற்றிப்போடும்.
தைரியமாய் உம் சத்தியத்தைப் பேச உதவிச் செய்திடும்.
இயேசுவே, நீரே வாழ்க உம் நாமம் மகிமையடைவதாக. ஆமென்.

13 AUG 2008

இயேசுவே உம் இரத்தமே எனக்கு ஜெயத்தை தந்தது.
இயேசுவே உம் வார்த்தைகளே எனக்கு உணவைப் போன்றது.
இயேசுவே உம் அபிஷேகமே எனக்கு ஜீவனைத் தந்தது.
இயேசுவே உம் அக்கினியே எனக்கு நித்திய தகனமானது.
இயேசுவே உம் சிலுவையே எனக்கு உகந்த அடைக்கலமானது.
இயேசுவே உம் பாதைகளே எனக்கு வெளிச்சமாய் உள்ளது.
இயேசுவே உம் வழிகளே எனக்கு ஜீவமார்க்கத்தை தந்தது.
இயேசுவே உம் போதனைகளே எனக்கு பாதைகளை காட்டியது.
இயேசுவே உம் சத்தியமே எனக்கு பரலோகத்தில் சேர்க்க வல்லது.
இயேசுவே உம் சித்தமே எனக்கு வேண்டியதாக உள்ளது.
இயேசுவே உம் ஞானமே எனக்கு போதுமானதாக உள்ளது.
இயேசுவே உம் அன்பொன்றே எனக்கு இரட்சிப்பை தரவல்லது.
இயேசுவே உம் வல்லமைகளே எனக்கு வேண்டியதாக உள்ளது.
இயேசுவே உம் கிரியைகளே எனக்கு தேவையானதாய் உள்ளது.
இயேசுவே உம் பார்வையொன்றே என்னை மாற்ற வல்லதாய் உள்ளது.
இயேசுவே உம் கரமே என்னை தேற்றக்கூடியதாய் உள்ளது.
இயேசுவே உம் ஜீவத்தண்ணீரே என் தாகத்தை தீர்ப்பதாய் உள்ளது.
இயேசுவே உம் காயப்பட்ட தழும்புகளே என்னை சுகமாக்க வல்லது.
இயேசுவே உம் பரிசுத்தமே எனக்கு வேண்டியதாய் உள்ளது.
இயேசுவே உம் கற்பனைகளே எனக்கு வெளிச்சமாய் உள்ளது.
இயேசுவே உம் ஆசீர்வாதமே எனக்கு வேண்டியதாய் உள்ளது.
இன்றே தாருமே. இப்பொழுதே வேண்டுமே. மகிமையின் தேவா.
உம்மைப் போற்றி ஆராதிக்கின்றேன். அன்பு செய்கின்றேன்.
இறைவா, வல்லமை வேண்டுமே. சாத்தானை வெல்ல வேண்டுமே.
இயேசுவே, பரிசுத்தம் வேண்டுமே, இச்சையை வெல்ல வேண்டுமே
அன்பரே, அன்பு வேண்டுமே, இரக்கம் செய்ய வேண்டுமே.
உம் வழிகளை அறிய வேண்டுமே, கண்டறிந்து ஓட வேண்டுமே.
அப்பா, என் இதயம் உம்மையே சார்ந்திருக்கின்றது.
நான் என்னை உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்தேன்.
உம்மையே நான் நேசிக்கின்றேன், நீரே என் அதிபதி.
சுகமான புல்வெளியில் என்னை நடத்திச் செல்பவரே
அமர்ந்த தண்ணீரண்டையில் கொண்டு சேர்ப்பவரே
என் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலை தரவல்லவரே
நீதியின் தேவனே, நித்திய பிதாவே, சத்திய கர்த்தாவே
உம்மை வாழ்த்தி என்றும்மை போற்றித் துதிக்கின்றேன்.
வல்லமைகளால் என்னை நிறைத்து ஆளுகை செய்யும்
இனி நானல்ல. என்னில் இயேசுவே நீரே ஜீவிக்கின்றீர். ஆமென்.

13 AUG 2008

தேவனே. உம்மை விட மாட்டேன். என் ஜீவனுள்ள நாளெல்லாம்
உம்மையே சேவிப்பேன். நித்திய காலமாய் உம்மை நான் ஆராதிப்பேன்.
உம்முடைய மகிமையை தினந்தோறும் நான் அனுபவிப்பேன்.
உம்முடைய அன்பை எப்பொழுதும் ருசித்துக் கொண்டிருக்கின்றேன்.
உம்மைப் பிரிந்து என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பேன்.
ஏனெனில் எல்லாவற்றையும் நடப்பிக்கின்றவர் நீர் நீர் மாத்திரமே
அப்பா, என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தேன் ஐயா.
என்னை உமது கையில் எடுத்து வனைந்து உருவாக்கி மகிழ்ந்திடும்
அப்பா, உம்மை நான் வாழ்த்தி மகிழ்ந்து துதிக்கின்றேன்.
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் நீர் எனக்கு வேண்டும்
எப்பொழுதும் நீரே எனக்கு வேண்டும். என் மன்றாட்டை தாங்கிடும்
வாழ்க்கை முழுவதும் உம்மையே போற்றித் துதிப்பேன்
இரக்கங்களின் பெரியவரே என்னை எல்லா தீங்கினின்றும் காப்பாற்றும்.
எல்லா பொல்லாப்புகளிலிருந்தும் என்னை விடுவித்து காப்பாற்றும்
தேவனே, மகிமையானவரே நித்திய ராஜாவே உம்மைப் போற்றுகிறேன்.
என் வாழ்நாளெல்லாம் உம்மைக் காண ஆசைப்படுகின்றேன்
என் சோதனை நாட்களையெல்லாம் கடத்திவிட வேண்டுகிறேன்.
என்னைக் காப்பாற்றும். சோதனையில் விழாதபடியும்.
அப்பா, உம்மிலே நான் நிலைத்திருக்க விரும்புகின்றேன்
உத்தமத்திலே நடந்து சத்தியத்தின் படி நடக்க விரும்புகின்றேன்
தெய்வமே என்னை நான் வெறுக்கின்றேன், உம்மை விரும்புகிறேன்
பரிசுத்தமாய் வாழ்க்கை ஜீவிக்கின்றேன், வழிகாட்டி கொண்டு செல்லும்
என் பாதைகளை நீர் செம்மையாக்கி மதிலை கட்டி வேலியிடும்
உளையான சேற்றிலிருந்து என்னை தூக்கி எடுத்திடும்
இவ்வுலகத்திலிருந்து என்னை பிரித்தெடுத்து உமக்காய் சேர்த்துக்கொள்ளும்
பரலோக வாழ்வை எனக்குத் தந்திட வேண்டுகின்றேன்.
வருகின்ற பொல்லாப்புகளிலிருந்து என்னைக் காப்பாற்றும்
அதிசயங்கள் பலவற்றைக் காணச் செய்யும்.
என் இருதயத்தை இன்னும் பரிசுத்தமாக்கி நீர் தங்கிடும்
நான் உமது ஆலயமாக இருக்கின்றேன், வந்து தங்கிடும்
நான் உமது பிள்ளையாக இருக்கின்றேன். என்னை தள்ளிவிடாதேயும்
நான் உமது அடிமையாக இருக்கின்றேன். நீரே என் எஜமானன்
சகலத்தையும் அறிந்துள்ளவர் நீர் உம்மை நான் ஆராதிக்கின்றேன்
பொக்கிஷ சாலையை திறந்திடும் என்னை ஆசீர்வதித்திடும்
நான் இனி நானல்ல என்னில் இயேசுவே நீரே ஜீவிக்கின்றீர்
உம்மை நான் ஏற்றேன். என்னை நீர் ஏற்றுக்கொள்ளும்
என்னை பழுத்துக்கொள்ளும் என் தடுமாற்றத்தை மாற்றிடும். ஆமென்.

14 AUG 2008

கர்த்தரே, என் வெயிலின் நேரத்தில் நீரே நிழலாய் இருக்கின்றீர்
என் துன்பத்தின் நேரத்தில் நீரே துயர் நீக்கும் இன்பமாயிருக்கின்றீர்
இறைவா, நான் என் செய்வேன். என்னிடத்தில் வார்த்தைகள் இல்லையே!
என்னை உமக்காய் தந்து விட்டேன் ஏற்றுக் கொள்ளும் ஐயா.
காலையிலே எழுந்து உம்மை நோக்கி காத்திருக்கச் செய்திடும்
அதிகாலையிலே ஜெபித்து திருப்பாதம் பற்றச் செய்திடும்
ஒவ்வொரு நாளும் உம்மை துதியாய் கொண்டு நடத்திச் சென்றிடும்
உம்மை மறவாமல் இருந்திட என் தலைமுறைத் தலைமுறையையும் காத்திடும்
என் வாழ்நாளெல்லாம் நீரே என்றென்றும் தெய்வமாக இரும்.
யாக்கோபின் சந்ததியைப் போலல்லாமல் பரிசுத்த சந்ததியாய் மாற்றிடும்
செம்மையான வழிகளில் என்னை நடத்திச் செல்லும்.
என் தாழ்மையால் என்னை நினைத்த தேவன் நீரே இயேசுவே
என்னை அழைத்து உயர்த்தி மேலே வைத்தவரும் நீரே இயேசுவே
உம்மை மறக்க பெருமானையா, என்னை நேசித்தவரும் நீரே இயேசுவே
நான் பாவி, எனக்காய் சிலுவை சுமந்தவரும் நீரே இயேசுவே
நான் குஷ்டன், எனக்காய் காயம் பட்டவரும் நீரே இயேசுவே
நான் கோழை, என்னை சிநேகிதனே என்றழைத்தவரும் நீரே இயேசுவே
நான் துன்மார்க்கன், என்னை நீதிமானாய் மாற்றினவரும் நீரே இயேசுவே
நான் கள்ளன், என்னை உண்மையுள்ளவனாய் ஆக்கினவரும் நீரே இயேசுவே
நான் ஒன்றுமில்லாதவன், எனக்கு அத்தனையும் தந்தவரும் நீரே இயேசுவே
பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினவரே அது நீரே இயேசுவே
உடன்படிக்கையைத் தந்த உம்மை பாவநிவாரண பலியாக்கினீரே இயேசுவே
திரைச்சீலையை உடைப்பவர் ஒன்றாய் இரண்டு ஆக்கவும் நீரே இயேசுவே
யூதா கோத்திரத்து சிங்கமே அல்பாவின் வழிகாட்டியும் நீரே இயேசுவே
என் உயிரிலும் மேலானவரே என் ஆவியின் நண்பரே
என் மரணமும் எனக்கே பாரமாக உள்ளதே. அடிக்கும்போதும்,
பரலோகத்தை நான் எதிர்பார்க்க ஆயத்தமாக உள்ளேனே.
ஆயினும் மரணத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறேன்.
என் பரலோகப் பாதையை செப்பனிட்டுக் கொண்டிருக்கிறேன்,
இறைவா, என் தேவனே. நீர் புதியன செய்கின்றீர். நன்றி
உமக்காய் எல்லாவற்றையும் தந்துவிட்டேன் நான். இனி
நானல்ல என்னில் இயேசுவே நீரே பிழைக்கின்றீர்.
என் சுயத்தை நான் வெறுத்து உம் சித்தத்தை எதிர் நோக்கியுள்ளேன்.
பேதுருவைப் போல உம்மை மறுதலிக்காதபடி என் ஆவிக்கு கட்டளையிடும்.
என்னோடும் என் ஆவியோடும் போராடுகின்ற எல்லா பாத
அசுத்த சக்திகளையும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின்
நாமத்தில் பிடித்து கட்டி அப்புறப்படுத்தி ஜெபிக்கிறேன். ஆமென்.

16 AUG 2008

ஆண்டவரே, உம்மை என் முழு இருதயத்தால் நேசிக்கின்றேன்.
எனக்கு இளைப்பாறுதலையும் இரக்கத்தையும் நீரே செய்திருக்கின்றீர்.
பரிசுத்தரே, உம்முடைய தயவினால் நான் இன்று நின்று கொண்டிருக்கிறேன்.
ஆவியானவரே, உம்முடைய உருவாக்கத்தில் நான் உருவாக்கப்பட்டு அழகாய் பிறந்தேன்.
இன்னும் என்னில் ஏதேனும் குறைகள் இருப்பின் என்னை திருத்திப்போட்டு
குறைகளை அகற்றி புதிதாய் அழகாய் தந்து உருவாக்கிடும் தேவா.
என்னுடைய ராஜனே உமக்கே என்னை தந்துவிட்டேன்.
இறைவா, எத்தனை இன்பங்கள் என்தன் இருதயத்திலே.
இதற்கெல்லாம் காரணர் நீரே நீர் மாத்திரமே இறைவா.
அப்பா, உம்மை நேசிக்கிறேன், ஆர்வமுடன் நேசிக்கிறேன்.
என்னுடையவைகள் எல்லாவற்றிலும் நீரே மகிமையடைய வேண்டுகிறேன்.
மகிமையான பரலோகம் என்னிலிருந்தும் மகிழ்ச்சியடைய செய்திடும்.
ஆம், ஆண்டவரே, உம்முடைய தயவினால் நான் வாழ்கிறேன்.
உம்முடைய நீதியுள்ள வார்த்தைகளை எடுத்துச்செல்லும் பாத்திரமாக மாற்றிடும்
என்னை பெலப்படுத்தும் என்னை திடப்படுத்தும் என்னை இரட்சியும்.
காலைதோறும் புதியதாய் இருக்கும் உமது கிருபைக்காய் ஸ்தோத்திரம்.
என் அழுகையை மாற்றி மகிழ்ச்சியை தருபவர் நீர்தானய்யா.
வற்றாத நீரூற்றைப் போலிருக்கும் என் இயேசுவே
உம்மை இன்றுமென்றுமாய் தேடுகிறேன். நீர் மறைவாய் இராதேயும்.
மோசேக்கு கிருபையானது போலவே எனக்கு தரிசனம் தாரும்.
உண்மையுள்ளவனாய் என்னை ஆக்கி நீரே தேவனாய் இரும்.
இறைவா, உமக்கு பிரியமானவளாய் என்னை மாற்றிடும்.
என்னுடைய பரிசுத்தரே, என்னுடைய ஆண்டவரே என் கோபத்தை மாற்றுமே
உள்ளத்தில் உள்ள என்கோபத்தை அடியோடு சாம்பலாக்கி போடுமே
நான் எல்லோருக்கும் கனி தரும் மரமாக இருக்க விரும்புகிறேன்.
என் அச்ச உணர்வுகளை என்னைவிட்டகற்றி தைரிய ஆவியால் நிரப்பிடும்.
கூனிக்குறுகி நடக்கும் என்னை நிமிரச்செய்து நடக்க வையும்.
தேவனே, மகிமையான ராஜனே நீரே என்னுடைய தேவனானீர்.
உம்மிடத்தில் எனக்கு சுதந்தரம் உண்டு. உம் பிள்ளையாய் மாற்றினீரே.
உம்மிடத்தில் எனக்கு ஆறுதல் உண்டு. நீர் என் தந்தையானீர்.
அப்பா, உம்மை போற்றித் துதித்து ஆராதிக்க மகிழ்கின்றேன்.
எங்கே நீர் இருக்கிறீர். நான் உம்மையே தேடுகிறேன்.
உம்முடைய இராஜ்யத்தையும் நீதியையுமே தேடுகின்றேன்.
உம்முடைய அன்பையும் இரக்கத்தையுமே தேடுகின்றேன்.
உமக்குரியவைகளையே நான் சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன்,
உமது நித்திய வாழ்வை எனக்கு அளிக்கும் வல்லமையை
எண்ணியெண்ணி துதிக்கிறேன். இயேசுவே எனக்கு உம்மை காண்பியும்.

[illegible].

16 AUG 2008

தெய்வமே உம்முடைய நினைவாய் இருக்கும்போது எத்தனை இன்பம்
இயேசுவே, ஆண்டவரே, அப்பா பிதாவே உம்மை நான் துதிக்கிறேன்.
உம்முடைய பிரசன்னம் எப்போதும் எங்களுக்கு வேண்டுமைய்யா.
உம்முடைய மகிமை எங்கள்மேல் எப்பொழுதும் இருக்க வேண்டுமைய்யா.
இறைவா, எனக்குரியவைகள் இவ்வுலகத்தில் சொந்தமா உள்ளது?
உம்முடையவைகள் என்றென்றும் உலகத்தில் சொந்தமா உள்ளது?
இறைவா, அதை இன்றைக்கு நான் வாங்கிக்கின்றேன்?
இறைவா, அதையே நான் உம்மிடத்தில் கேட்டுக்கொண்டிருக்கின்றேன்?
இயேசுவே, என்னை இன்னும் தூய்மையாக்கும். அசுத்தம் நீங்கட்டும்.
பரிசுத்தரே, என்னை இன்னமும் பரிசுத்தப்படுத்தும். அசுத்தம் அகலட்டும்.
அப்பா, உம் பிரசன்னத்தை என்னைவிட்டு நீக்கிவிடாதிரும்.
தாவீது பாவம் செய்தான். உமது பிரசன்னத்தை அவனைவிட்டு நீக்கினீர்.
இயேசு பரிசுத்தம் செய்தார். உமது இராஜ்யத்தின் திறவுகோல்களை அருளினீர்.
அப்பா, உம்முடைய இராஜ்யத்தில் நான் பிரவேசிக்க வேண்டுமே!
அழிவில்லாமல், இவ்வுலக ஜனங்களையும் அதனுள் கொண்டு வாருமே!
என் தேச ஜனங்களெல்லோரும் உமதண்டை சேருமே!
இறைவா, மோசே திருப்பின் வாசலிலே நின்றபோது அவன் முகத்தைப்பார்த்து
இஸ்ரவேலர் மீது மனமிரங்கினீர். பல ஜனங்கள் மீண்டனர்.
பிதாவானவரே, என்னுடைய முகத்தைப்பாரும் என் ஜெபத்தைக் கேளும்
இவ்வுலக மாந்தர்கள் மாண்டு போகாதபடி அவர்கள் மீது மனமிரங்கும்.
உம்முடைய இராஜ்யத்தை அவர்களைவிட்டு நீக்காதிரும்.
அவர்கள் செய்கின்ற பாவத்தையெல்லாம் என் அருள்நாதர்
இயேசுவண்டையில் அவருடைய இரத்தத்தில் மறைக்கச் செய்திடும்.
இறைவா, இரட்சிப்பின் தலைவரானவர் இவ்வுலக மாந்தர்க்கு
இன்றும் என்றும் எப்பொழுதும் ஜொலித்துக்கொண்டே இருக்கும்.
இயேசுவே, நீர் வர தாமதித்தால், இனிமேலும் பாரத்தோடு
சந்ததியரோடு ஜெபிக்கிறேன் என் தேவாதி தேவா.
உம் சந்ததியார் உமது நாமத்தை அறிந்தவர்களாயும்,
அவர்களுடைய இருதயத்தில் உமது வசனங்கள் பதிந்துள்ளதாயும்,
அவர்கள் உம்முடைய கட்டளைகளையும் கற்பனைகளையும் கைக்கொள்வோராயும்
உமக்கு பிரியமான ஜனமாயும் நீர் தெரிந்துகொள்ளும்.
இறைவா, அவர்களும் உம்முடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பவர்களாக
மாற்றி ஜெயங்கொண்டவர்களாக உருவாக்கிவிடும்.
இராஜாதி ராஜனே, உம்முடைய கிருபையின் தானம்
இச்சந்ததியோடு மட்டுமின்றி வரக்கூடிய சந்ததியாருக்கும்.
குறையாதபடி, உம் கிருபையை அதிகமாக்கிடும்.
துதிப்பும், புகழும் என் இயேசுவுக்கே சொந்தம். ஆமென்.

17 AUG 2008

என் தேவாதி தேவனே உம்மை வாழ்த்தி வரவேற்கின்றேன்.
உம்மைப் பாடிப் போற்றித் துதித்து ஆராதனை செய்கின்றேன்.
வல்லமைகள் அனைத்தும் உமக்கே சொந்தமாகக் கொண்டுள்ளீர்.
மகிமையை எவருக்கும் யாருக்கும் விட்டுக்கொடுக்காதவர் நீர்.
நீரே எல்லாவற்றிலும் முதன்மையானவராய் இருக்கின்றீர்.
உம் உயிர்த்தெழுதலின் மகிமை என்றும் மாறிப்போவதில்லை.
உம் வல்லமைகள் இவ்வுலகிலே எவருக்கும் இணைந்து போவதில்லை.
இறைவா, என் மாம்சம் என் ஆத்துமாவிற்கு பாரமாய் உள்ளது.
இயேசுவே என் மாம்சம் தரும் வலியை ஆத்துமா ஏற்றுக்கொள்வதில்லை.
மாம்சத்தில் வலி ஏற்பட்டால் என் ஆத்துமாவிற்கு நோயைத் தருகின்றது.
இறைவா, என் வலியை என் மாம்சத்தை விட்டகற்றிப் போடும்.
என் மாம்சத்தின் தேவையை என்னைவிட்டகற்றிப் போடும்.
என் ஆத்துமாவின் நோயை அதனைவிட்டு அகற்றிப் போடும்.
என் ஆவியின் அங்கலாய்ப்பை அதனைவிட்டு எடுத்துப் போடும்.
இராஜா, நீர் பெரியவர் துதிக்கப் பாத்திரர் வணக்கத்துக்குரியவர்.
உம்முடைய அதிசயங்கள் எப்பொழுதும் நடந்துகொண்டிருக்கின்றனவே.
அப்பா, உம்மை நான் நேசித்து காத்திருந்து மகிழ்கின்றேன்.
உம்முடைய இராஜ்ஜியத்தையும் நீதியையுமே முதலில் தேடுகிறேன்.
உம்முடைய இராஜ்ஜியமே மிகப் பெரிய சாம்ராஜ்ஜியம்.
உம்முடைய இராஜ்ஜியமே வல்லமையுள்ள இராஜ்ஜியம்.
உம்முடைய இராஜ்ஜியமே ஐசுவரியம் நிறைந்துள்ள இராஜ்ஜியம்.
உம்முடைய இராஜ்ஜியமே எல்லா தேசங்களுக்கும் மேலான இராஜ்ஜியம்.
உம்முடைய இராஜ்ஜியமே என்னுடைய உறைவிடம்.
உம்முடைய இராஜ்ஜியமே உமது பக்தர்களின் தங்குமிடம்
உம்முடைய இராஜ்ஜியமே பரிசுத்த, மேன்மையுள்ள சாம்ராஜ்ஜியம்
உம்முடைய இராஜ்ஜியமே இவ்வுலகை ஆளும் இராஜ்ஜியம்
அப்பா, உமது இராஜ்ஜியம் இப்பூவுலகில் இறங்கி வருவதாக.
உம்முடைய சித்தம் பரலோக இராஜ்ஜியத்தில் செய்யப்படுவது போல
இப்புவியிலும் செய்யப்பட வேண்டுகிறேன். என்னுடைய
அனுதின உணவை எனக்கு அன்றன்றைக்கு அளித்திடும்
எனக்கு யாரேனும் தீமை நினைத்திருப்பார்களானால் அவர்களை
நான் மன்னித்தேன். அதைப்போல என்னுடைய பாவங்களை
பிதாவானவரே, நீரே மன்னித்து உம் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும்.
என்னையும். இவ்வுலகத்தாரையும் சோதனையினின்று காப்பாற்றும்.
தீமையான காரியங்களினின்று எங்களை விடுவித்து இரட்சித்தருளும்.
அப்பா, என் ஜெபங்கள் கேட்கப்பட வேண்டும்
என் விண்ணப்பங்களுக்கு நீர் பதில் தர வேண்டுமே இராஜா. ஆமென்.

17 AUG 2008

இறைவா, உம்முடைய இரக்கம் வேண்டுமே, எப்பொழுதும் வேண்டுமே
உம்முடைய இராஜ்ஜியத்தில் என்னையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமே
அப்பா, எனக்கு வேண்டியதை நீர் தான் தர வேண்டுமே
ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ளும் பந்தயத்தில் நான் வெற்றி பெறவேண்டுமே
ஜீவ விருட்சத்தை அடையும் வழியை நான் தெரிந்துக் கொள்ளவேண்டுமே
இறைவா, நான் தேடுகின்றதை எனக்கு தெரியப்படுத்தும்
நான் விரும்புகின்றதை எனக்கு இப்போதே அளித்திடுமே
நான் ஆசைப்படுகின்றதை எனக்கு நீரே தந்திட வேண்டுகின்றேன்
நீர் உமக்கு பிரியமானதை எனக்கு தந்திட வேண்டுகின்றேன்.
அப்பா, உம்முடைய வார்த்தைகள் என் இருதயத்தில் நிலைக்கவேண்டுமே
உம்முடைய நீதியுள்ள வசனங்கள் என்னை அலங்கரிக்க வேண்டுமே
உம்முடைய பட்டான சொற்களால் என்னை உடுத்திக்கொள்ள வேண்டுமே
உம்முடைய சத்தியமுள்ள திருமொழிகளால் என்னை நிரப்ப வேண்டுமே
இறைவா, உம்மையே நான் நேசித்து காத்திருந்து மகிழ்கின்றேன்.
என்னுடைய எல்லாவற்றிலும் நான் உம்மையே நேசிப்பேன்
எனக்குரியதில் சிறந்ததை நான் உமக்கே கொடுப்பேன்
இராஜா, என் வாழ்வில் இயேசு என்ற நாமம் ஒரு பெரிய திருப்புமுனை.
எங்கே இருந்து வந்தோம்? எங்கே போகிறோம்?
யாரிடத்திலிருந்து வந்தோம்? யாரிடத்திற்கு போகிறோம்?
ஏன் வந்தோம்? எதற்காக வந்தோம்?
எப்படி வந்தோம்? எப்பொழுது வந்தோம்?
என்கிற தேவையான, சிறந்த கேள்விகளுக்கான விடையை
இயேசுவே உம்மிடத்தில் நான் பெற்றுக்கொண்டேன். நன்றி.
அப்பா, இன்றும் எத்தனையோ மனிதர்கள் அதே மாதிரியான
கேள்விகளை கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கும்
பதிலை அளிக்கக்கூடிய தகுதியுள்ளவர் நீர் மாத்திரமே.
பதிலைத் தாரும். உம்மண்டையில் சேர்த்துக்கொள்ளும்.
உம்முடைய இராஜ்ஜியத்தின் அங்கத்தினர்களாய் மாற்றிடும்.
இயேசுவே, என் மேய்ப்பரே, என் தேவனே, என் நண்பரே
நீரே நல்லவர். நீர் மாத்திரம் நல்லவர். நீரே தூயவர்
உம்முடைய இரக்கங்களுக்காய் நான் நன்றி சொல்கிறேன்.
உம்முடைய தயவை எனக்கு காண்பியும் இறைவா.
உம்முடைய மகிமையை எங்களுக்கு காண்பியும் இராஜா.
வல்லமையும், மகிமையும், கனமும் உமக்கே உரியதானது.
வாழ்க. உம் நாமம் உயர்க. உம் சித்தம் இப்புவியில் நிறைவேறுக.
அப்பா, உம்மை நேசிக்க நான் உம்மைப் பிரியப்படுத்துவேன்
நீரே நல்லவர், நீரே எனக்குரியவர். என்றும் மாறாதவர். ஆமென்.

17 AUG 2008

இறைவா, என் உடல் வலிமை என்னை விட்டு அகன்றிடும்
உமக்கு எல்லா வல்லமையும் உண்டு என்று அறிவேன்
ஆண்டவரே யகோவா ராஃப்பா, அகம் ஆளும் தெய்வமே,
உம்மை நோக்கி காத்திருக்கின்றேன் என்னை சுகப்படுத்தும்.
என்னைத் தொடுகிறவன் உம் கண்மணியைத் தொடுகிறான் அன்றோ?
என்னை எந்த வியாதியும் தொடாதபடி என்னை பாதுகாத்துக்கொள்ளும்
அப்பா, உம்மை நான் நேசிக்கின்றேன் என்னை மறந்துவிடாதேயும்
உமக்கு பிரியமானவனாய் என்னை நீர் மாற்றி வைத்துக்கொள்ளும்
உமக்கு உகந்தவனாய் என்னை நீர் மாற்றி உருவாக்கும்.
ராஜா உம்மையே நான் நேசித்து அன்பு செய்கின்றேன்.
எனக்கு நீர்தானே நண்பன் எனக்கு வழியைக் காட்டுபவரும் நீர்தானே.
ராஜா, என் உடலைத் திடப்படுத்தி பெலப்படுத்தி பாதுகாத்துக்கொள்ளும்
நான் வெளிச்சத்திலே நடக்க எனக்கு உதவி செய்திடும்.
உம்முடைய நீதியின் படி செயல்பட எனக்கு உதவி செய்திடும்.
அப்பா உம்மையே நான் நேசித்து அகமகிழ்கின்றேன்.
எனக்கான யாவையும் செய்து முடித்தவரே உமக்கே ஸ்தோத்திரம்
என்னுடையவைகளை பரிசுத்தப்படுத்தி எனக்குத் திருப்பி தருகிறவரே,
உம்மை நான் எப்படி பாடி மகிமைப்படுத்துவேன்?
என்ன சொல்லி நான் உம்மைத் துதிப்பேன்?
இறைவா, என் இன்பத்தில் உம்மைத் துதித்தேன்? இனிவரும்
துன்பத்திலும் உம்மையே துதிப்பேன்?! துன்பத்தில் துதித்தேன்,
இனிவரும் இன்பத்திலும் உம்மையே துதிப்பேன்!
ராஜா என்மேல் மனமிரங்கும். உமது இரத்தம் சிந்தி என்னை மீட்டீர்
உமக்கு கோடி நன்றிகள் சுவாமி. கோடி ஸ்தோத்திரங்கள் அப்பா.
என் உயிரை பெரு பொருட்டாய் எண்ணினீரே கோடி நன்றிகள் சுவாமி.
அப்பா, உம்மையே நேசித்து அகமகிழ்ந்து களிகூருகின்றேன்.
இறைவா, உம்முடைய இரக்கங்களுக்காக நன்றி சொல்லி மகிழ்கின்றேன்.
என் கைகளுக்கு பெலத்தைத் தாரும். உமக்காய் எழுத வையும்.
உணர்வுள்ளதாய் மாற்றி உபயோகப்படுத்தும்.
ராஜா எனக்கான யாவையும் முன்குறித்தீரே நன்றி.
முன்குறித்ததை நிறைவுசெய்து நிறைவேற்றி முடித்தீரே நன்றி.
என்னை பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவால் எல்லாவற்றையும்
எந்நேரத்திலும் எவ்விடத்திலேயும் செய்ய எனக்கு பெலனுண்டு.
அப்பா உம்முடைய பெலன் எனக்குப் போதும்.
என் பெலவீனத்தில் உம்முடைய பெலன் பூரணமாய் விளங்கும்.
நன்றி. எனக்காய் நீர் கிருபையை அளந்ததற்காய்,
வாழ்க என் இயேசு. அவர் நாமமே பெருகி நிறைவதாக. ஆமென்.

19 AUG 2008

இறைவா, சுகத்தை தருபவரே, எனக்கு சுகம் தந்தீரே நன்றி.
என்னுடைய வேதனைகளையெல்லாம் நீக்கினீரே உமக்கு நன்றி.
அப்பா, பிதாவே எனக்காக உம் குமாரனை அனுப்பினீரே நன்றி.
தினந்தோறும் உமது கிருபையால் என்னை நிற்கச் செய்கிறீரே நன்றி.
காலைதோறும் உமது கிருபை புதியதாய் இருப்பதற்காய் நன்றி.
என்னுடைய தேவனே உம்மை வாழ்த்தி போற்றிப் பாடுகிறேன்.
இராஜா, என் வழிகளில் ஜீவனைத் தாருமே!
என் வார்த்தைகளில் ஒரு உற்சாகத்தைத் தாருமே!
நான் உச்சரிக்கும் வசனத்தில் புது ஜீவனைத் தந்திடுமே!
அப்பா, உம்மை துதிக்கின்றேன் ஆர்வமுடன் நேசிக்கின்றேன்.
எப்பொழுதும் இருக்கின்றவராக இருக்கிறவரே உமக்கு நன்றி.
உம்முடைய ஜீவனுள்ள வார்த்தைகளுக்காய் கோடி நன்றிகள்.
அப்பா, என் இலக்கணப் பிழைகளை மன்னித்தருளும்.
இனியும் சிறப்பாக எழுத எனக்கு உதவிகள் செய்யும்.
பல மொழிகளில் எழுத எனக்கு உதவிகள் செய்யும்.
அழகாய் எழுத எனக்கு உதவிகள் செய்யும்
அற்புதமாய் எழுத எனக்கு உதவியும் கிருபையும் தாரும்
ஜீவனுள்ள எழுத எனக்கு புது ஜீவனைத் தாரும்.
சத்தியத்தை எழுத எனக்கு சகல வித சத்தியத்தையும் போதியும்
தேவ ராஜ்ஜியத்தை குறித்து எழுத எனக்கு ராஜ்ஜியத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தும்
இயேசுவைக் குறித்து எழுத என்னில் இயேசுவே நீரே வாரும்
பரிசுத்தத்தைக் குறித்து எழுத என்னில் பரிசுத்தம் கரைபுரண்டு ஓடுவதாக.
பிதாவின் சித்தத்தை குறித்து எழுத அவரே அவரது சித்தத்தை சொல்வாராக.
மகிமையான உமது கிருபையைக் குறித்து எழுத எனக்கு கிருபை தாருமே.
உமது கனிகளை குறித்து எழுத எனக்கு அதின் கனிகளை தந்திடும்.
உமது கிருபைவரங்களை குறித்து எழுத எனக்கு அதின் வரங்களை தந்திடும்.
நோய்கள் நீக்கும் வல்லமைகளை எழுத எனக்கு அதின் வரத்தை தந்திடும்.
விசுவாசத்தை குறித்து எழுத எனக்கு உம்மேல் அதிக விசுவாசத்தை ஏற்படுத்தும்.
தீர்க்கதரிசனத்தை எழுத எனக்கு தரிசனங்களை காண்பியும்
ஆவிகளைப் பற்றி எழுத எனக்கு ஆவிகளை பகுத்தறியும் வரத்தை தாரும்.
அற்புத அடையாளங்களை எழுத எனக்கு அற்புதங்கள் பல செய்திடும்.
நான் நிற்பதும் நிர்மூலமாகாமல் இருப்பதும் உமது சுத்த கிருபை.
என்னை நிற்கச் செய்திடும். நிர்மூலமாகாமல் இருக்கச் செய்திடும்.
உம் வல்லமைகள் என்றென்றும் குறைந்துபோகாமல் இருப்பதற்காய் நன்றி
எல்லாவற்றுமான அசுத்த செயல்களிலிருந்தும் என்னை காத்திடும்
பரிசுத்த வாழ்வை எனக்கு கட்டளையிட்டு என்னை சுத்தம் செய்திடும்
இடைவிடாமல் ஜெபிக்கவே என்னில் உருவாகட்டும். ஆமென்

20 AUG 2008

தேவா, உம்முடைய கிருபையால் நான் நிலைத்திருக்கிறேன்.
உம்முடைய வார்த்தைகள் யாவும் என் இருதயத்தில் விதைக்கப்படுவதாக.
விதைக்கப்பட்டவைகள் யாவும் முளைவிட்டு வளர்வதாக.
முளைவிட்டவை யாவும் கனி தரும் மரமாக செழிப்பதாக.
மரமாக செழித்த யாவும் பிறருக்கு நிழல் தருவதாக.
மரத்திலிருந்து மீண்டும் புதிய விதைகள் உருவாவதாக.
என் கண்கள் நன்மையானவற்றையே காணச் செய்யும்.
என் காதுகள் உம்முடைய வசனத்தையே கேட்கச் செய்யும்.
என் உதடுகள் உம் வார்த்தைகளையே உச்சரிக்கச் செய்யும்.
என் கால்கள் உம்முடைய பாதையில் நடத்திச் செல்லும்.
என் கைகள் உம்முடைய காரியங்களை பக்குவமாய் செய்யட்டும்
என் உடலின் உறுப்புகள் யாவும் உம் பெயரையே சொல்லி மகிழட்டும்
என் ஜீவனும் உம்முடைய தண்ணீருக்காய் தாகத்தோடு காத்திருக்கட்டும்.
எப்பொழுதும் என் இருதயம் உம்மையே நோக்கி இருக்கட்டும்.
இறைவா, மகிமையான உம் திருவசனங்கள் என் வாயிலிருந்து வெளிப்படட்டும்
மகிமையான பிரசன்னம் என் மீது எப்பொழுதும் இறங்கட்டும்
பரலோக வாசல்கள் எனக்காய் என்றும் திறக்கட்டும்
நீதியின் சூரியன் என் தலைமேல் எப்பொழுதும் உதிக்கட்டும்.
இறைவா, உம்முடைய இரக்கங்கள் என்னில் வெளிப்படட்டும்.
பிதாவே, உம்முடைய சித்தம் செய்து வாழ என்னை கிருபை செய்யும்.
உமக்கு பிரியமுள்ளவனாக வாழ என்மேல் பிரியம் வைத்திடும்
உள்ளான மனிதனை உம்முடைய புதிதாக்குதலால் புதிதாக்கும்.
விலையேறப்பெற்ற உம் இரத்தத்தால் என்னை கழுவி சுத்தமாக்கும்
ஒரு புது தேவ சரித்திரம் உண்டாக்க என்னை பயன்படுத்தும்
ஒரு புது தேவ சித்தம் வெளிப்பட என்னை பயன்படுத்தும்
ஒரு புது தேவ காரியம் செய்யப்பட என்னை பயன்படுத்தும்
ஒரு புது தேவ வசனங்கள் தரப்பட என்னை பயன்படுத்தும்
ஒரு புது உலகம் உருவாக என்னை பயன்படுத்தும்
தேவா, உம் இராஜ்யம் கட்டப்பட என்னை பயன்படுத்தும்
ஒரு புது மகா பரிசுத்தவானாய் வாழ்ந்திட என்னை பயன்படுத்தும்
தேவா, உம் சிந்தனைகள் வெளிப்பட என்னை பயன்படுத்தும்
இராஜா, மகிமையான பிரசன்னம் வெளிப்பட என்னை பயன்படுத்தும்
ஜனங்களின் நோய்களை தீர்க்க என்னை பயன்படுத்தும்
மக்களின் குறைகள் நீங்க என்னை பயன்படுத்தும்
தேசங்களின் செழிப்பு வர என்னை பயன்படுத்தும்
உலகம் எழுப்புதலைக் காண என்னை பயன்படுத்தும்
இயேசுவே என்னை எடுத்து பயன்படுத்தும். ஆமென்.

21 AUG 2008

அன்பரே, உம்முடைய இணையாய் என்னை தெரிந்துக்கொண்டீரே
என் மீது இரக்கமாய் இருக்க சித்தம் பூண்டீரே
என் மீது உருக்கமாய் இருக்க சித்தமானீரே
என் மீது பிரியமாய் இருக்க சித்தம் கொண்டீரே
என் மீது அன்பாய் இருக்க சித்தப்பட்டீரே நன்றி இராஜா.
இவ்வுலகில் எத்தனையோ கோடி தேவர்கள் என்று சொல்லப்படும்
பொம்மைகள் உண்டு. ஆனாலும் என் தேவன் நீர் மாத்திரமே
மெய்யான ஜீவனுள்ள தேவன் என்று அறிவேன்.
உம்முடைய மென்மையான அன்பு என்னை தேற்றுகின்றது.
பாவக்கட்டுகளில் அகப்பட்டிருந்த என்னை விடுதலையாக்கி
உம் பாசக் கயிற்றினால் கட்டி என்னை பரிசுத்தமாக்கினீரே நன்றி.
எனக்கு ஜெயம் தரும் பொருட்டாய் என்னை உமக்காய் மாற்றி
இவ்வுலகை வென்று மரணத்தை வென்று ஜெயிக்கிறவனாய் மாற்றினீர்.
என்னை பரலோக பயணத்திற்காய் ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பதற்காய் நன்றி
உமக்கென வாழ என்னை தெரிந்துக்கொண்டீர் அதற்காய் நன்றி.
பரிசுத்தமுள்ளவனாய் மாற்றி என்னை பக்குவப்படுத்தினீரே நன்றி.
இன்னும் நான் பரிசுத்தமாக்கப்படணும். என் குணங்களை மாற்றணும்
சுத்த இருதயமுள்ளவனாக என்னை மாற்றி தேற்றணும்
அசுத்தங்களை விட்டு விலகியிருப்பவனாய் என்னை மாற்றணும்.
ஆவியிலே அசுத்தமாயிருந்த என்னை ஆவியிலும் பரிசுத்தமாக்கணும்.
இயேசப்பா, பாவ சுபாவங்கள் என்னை விட்டு அகன்று போகட்டும்
சாபமான யாவையும் என்னையும் என்னைச் சார்ந்தவைகள்,
யாவையும் விட்டு இன்றே அகன்று போகட்டும்.
உம்முடைய வார்த்தைகளை எப்பொழுதும் தியானிப்பவனாய் மாற்றும்.
உம்முடைய வசனத்தை நெஞ்சேயும் கைக்கொள்பவனாய் மாற்றும்.
சோர்வுகள் என்னை விட்டு என்றென்றும் அகன்று போகட்டும்.
உடல் அசதிகள் என்னை விட்டு விலகியே இருக்கட்டும்.
சத்திய வசனங்கள் என்னில் விதைக்கப்பட்டு உயர்வாய் வளரட்டும்.
என் இருதயம் உம் வசனங்கள் வாழும் வீடாக மாறட்டும்
என் வாய் உம் வார்த்தைகளை உதிர்க்கும் பூவாக மாறட்டும்
என் கரங்கள் உமது அற்புதங்களை செய்யும் கோலாக மாறட்டும்
என் பாதங்கள் உமது நீதியை நடப்பிக்கும் வெளிச்சமாக ஆகட்டும்
தேவனே, என்னை நோக்கிப் பார்த்து என்னை நேசியும்.
நான் இவ்வுலகில் புழு தூசியும், சிறிய துரும்பும் ஆனவனானேன்.
என்னை மறந்து விடாதேயும். என்னை தள்ளிவிடாதேயும்.
நான் உமக்கு பிரியமானவனாய் வாழவே விரும்புகிறேன்.
என்னை தெரிந்துக்கொண்டவரும் என் தேவன் என் இயேசுவே. ஆமென்.

23 AUG 2008

அப்பா, என் நினைவெல்லாம் நீரே, அதுமந்திரம் போதுமே!
உமக்கு சித்தமானதை செய்து பரிசுத்தமாய் இருக்க செய்யும்
என்னுடைய வேண்டுதல்களின் காரியங்களை நீர் அறிந்தவரே
எனக்கு இனி பரலோக இராஜ்யத்தை பற்றி மட்டும் சிந்திக்க வேண்டுமே
பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை எனக்கு வெளிப்படுத்தும்
நித்திய வாழ்வின் அற்புதங்களை எனக்கு வெளிப்படுத்தும்.
உம் சிங்காசனத்தின் மகிமை எனக்கு காணப்படும்.
அற்புதங்கள் செய்யும் ஊழியம் ஒரு மாதிரிப்போல் அல்ல
ஒரு புதிய ஊழியத்தை செய்ய கிருபை பாராட்டும்.
பரலோக இராஜ்யத்தின் அற்புதங்களை எனக்கு காட்டும்
பரலோக மகிமை என் தலையின் மேல் உதிப்பதாக
தேவ மேன்மையான இரகசியங்களை எனக்கு வெளிப்படுத்துவீராக.
நீர் எனக்கு தந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவீராக.
நீர் எனக்கு சொன்ன எல்லாவித ஊழியங்களை நிறைவேற்றுவீராக
பரலோக தரிசனம் எனக்கு காண்பிப்பீராக
இரட்சகா, இயேசுவே உமது முகத்தை எனக்கு காண்பிப்பீராக.
நீதியின் சூரியன் நிழல் போல என்னைத் தொடரும்.
உமது பரிசுத்தம் ஒவ்வொரு நொடியும் என்னை பரிசுத்தமாக்கட்டும்
பரிசுத்தமான பரலோகத்தை தரிசிக்க வேண்டுகிறேன்
பரிசுத்த கர்த்தாவே என் இயேசுவையே தரிசிக்க விரும்புகிறேன்.
இரட்சகா, என்னில் இன்னும் சுபாவங்களை மாற்றிடும்.
எனக்காக ஒருமுறை உமது இராஜ்யத்தை காட்டும்.
என் கடமை நான் செய்கிறேன். செய்து முடித்தேன்.
என் தேவன் இனி நீர் தான் எனக்கு பதில் தர வேண்டும்.
நீர் உள்ள தேவனாம் என் கர்த்தராகி கர்த்தர் இயேசு
பத்தியத் தரும் தேவனாம் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்
எனக்கொரு ஜெபம் உண்டு என் சொந்த தேசத்தை காண வேண்டும்
எனக்கொரு விண்ணப்பம் உண்டு என் அப்பாவின் தேசத்தை காண வேண்டும்
எனக்கொரு ஆசை உண்டு அந்த தேசத்திற்கு சென்று மகிழ வேண்டும்
அப்பா, என் ஜெபங்கள் என் விண்ணப்பங்கள் என் ஆசை
யாவும் உம்முடைய இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வதாகவே.
இறைவா, என் கண்ணீர் துடைத்து உம்மோடு சேர்த்துக்கொள்ளும்
என் சொந்த தேசத்திற்கு என்னை எடுத்துச் செல்லும்
என் இயேசு எனக்காய் கட்டின வீட்டைக் காண ஆசைப்படுகிறேன்.
என் இயேசு என் குடும்பத்திற்காய் கட்டின அரண்மனையைக் காண வேண்டும் ஆசை
பரிசுத்தம் பரிசுத்தம் பரிசுத்தம் எப்பொழுதும் பரிசுத்தம்
அந்த சொந்த தேசம் எனக்குச் சொந்தம். ஆமென்.

24 AUG 2008

ஐயா, உம்முடைய இராஜ்யத்தை எதிர்நோக்கி காத்துக்கொண்டிருக்கிறேன்.
இராஜ்யத்தை என் கண்களால் காணப்போவதற்காக நன்றி.
உம்முடைய சிங்காசனம் இருக்கும் இடத்தை எனக்கு காண்பிக்க போவதற்காக நன்றி.
உம்முடைய மகிமையை சீக்கிரத்தில் முழுமையாய் உணரச் செய்வதற்காக நன்றி.
தேவாதி தேவன் உம் இரக்கம் எங்களில் இறங்கப்போவதற்காக நன்றி.
உம்முடைய சொந்த தேசம் எனக்கும் சொந்த தேசமாக மாற்றுவீர்.
இப்புவியில் நான் வாழ்வது கொஞ்சம் வருஷங்கள் தானே.
அங்கே எனக்கொரு தனித் தேசம் உண்டு அது எனக்கானது தானே.
இப்புவியில் எனக்கென்று ஒரு சொந்த வீடு இல்லை.
அங்கே எனக்கென்று ஒரு சொந்த அரண்மனை உண்டு தானே.
இப்புவியில் இருள் உண்டு துக்கங்கள் உண்டு
அங்கே இருள் இல்லை துக்கங்கள் இல்லை தானே.
என் தேவனும் தகப்பனுமாயிருக்கிற இயேசு வாழும் இடம் அது.
என் மணவாளனாகிய என் சிருஷ்டிகரான கர்த்தர் உலாவும் இடம் அது.
பரலோகத்தின் தகப்பன் என் ஒப்பற்ற ஆபிரகாம் இருக்கும் இடமும் அது தானே.
தேவனின் சேனைத் திரள் அணிவகுத்து நிற்கும் இடமும் அங்கே தானே.
ஜீவ நதி புறப்பட்டு செழிப்பை காட்டும் இடமும் அது தானே.
அழகான மலர்கள் அசையும் அம்சங்கள் நிறைகொள்ளும் இடம் தானே.
தேவனை எப்பொழுதும் இடைவிடாது துதித்துக்கொண்டிருக்கும் இடமும் அது தானே.
சங்கீதங்களாலும் துதிகளாலும் ஆராதனையினாலும் நிறைந்துள்ள இடமும் அது தானே.
என் தேவன் என் இயேசு எனக்காய் ஆயத்தம் செய்து வைத்துள்ள இடம் தானே.
எனக்காகவே அழகழகாய் செதுக்கி வடிவமைத்துள்ள வீடு அங்கே தானே
சீக்கிரமாகவே என்னை அழைத்துச் செல்ல நான் செல்லும் இடம் அது தானே
என் இயேசு என்னை மகிமையுள்ள மனிதனாக மாற்றுவாரே.
அவருடைய இராஜ்யத்தில் என்னையும் சேர்த்துக்கொள்வாரே.
மெய்மையான அந்த தேசம் நான் வாழப்போகும் என் சொந்த தேசம்.
என்னை இயேசுவே வந்து அழைத்துச் செல்வார். நான் காத்திருக்கிறேன்.
அப்பா பிதாவே உம்முடைய சித்தம் எதுவோ அதுவே நடப்பதாக.
நான் உம்முடைய இராஜ்யத்திற்கு வர விரும்புகிறேன்.
என் பரிசுத்தரான என் இயேசு என்னை பரிசுத்தப்படுத்துகிறார்.
நான் இனி பாவியல்ல, தினந்தோறும் பரிசுத்தமாக்கப்பட்டு வருகிறேன்.
நான் இனி துரோகி அல்ல, தினந்தோறும் தூய்மையாக்கப்பட்டு வருகிறேன்.
நான் இனி துன்மார்க்கன் அல்ல, தினந்தோறும் தூர்வாரப்பட்டு வருகிறேன்.
என்னை என் சொந்த இரட்சகர் மன்னித்து மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டார்
நான் என்னை அவருக்கு ஜீவபலியாக்கினேன். அவரே என்னை நடத்துவார்.
என் கண்களை அவருக்கு நேராய் உயர்த்தி பார்ப்பேன்
அவரே இனி என்னில் வாழ்கிறார். நான் மரித்தேன். ஆமென்.

25 AUG 2008

இயேசுவே, என் இரட்சகரே, என் தேவனே உம்மை மறவேன் நான்.
எனக்கொரு ஆசை உண்டு. யேசுவோடு நானும் பரலோகத்திற்கு சென்று வரணும்.
ஆண்டவரே, அத்தகைய ஒரு பாக்கியத்தை எனக்குத் தந்தருளும்.
நான் அறிகிறேன் சத்தியம் எனக்கு சொல்லித் தருகின்றது.
பரலோகத்தில் என் பெயரை எழுதியிருப்பதற்காய் நான் பாக்கியவான்.
பரலோகத்தில் எனக்கு ஒரு வீடு தயாராக வைக்கப்பட்டிருப்பதால் நான் பாக்கியவான்
இனியவா, நோய்களைத் தீர்ப்பதும் பேய்களை விரட்டுவதும் பெரிதல்ல,
அதைப்பற்றி நான் அதிகமாக சிந்திப்பதும் இல்லை.
இனி அதைப்பற்றிய நினைவுகள் வந்தாலும் அதை ஒதுக்கிவிட்டு அகற்றிடுவே
என்னுடைய நாமம் பரலோகத்தில் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பதற்காக
நன்றி நன்றி என்று உம்மை துதித்து ஸ்தோத்தரித்து மகிழ்கிறேன்,
வாழ்க்கையின் பயணத்தில் நான் மறந்து போய்விடாமல் இருக்க
நித்திய வாழ்வின் பயனை சுதந்தரித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.
எனக்குரியதல்லவே இப்பூமி. என் தேசம் ஒன்று உண்டல்லவோ.
எனக்கென்று ஒரு இராஜா, எனக்கென்று ஒரு நித்திய வாழ்வு.
எனக்கென்று ஒரு இடம், எனக்கென்று ஒரு பொக்கிஷம்
எனக்கென்று ஒரு கூடாரம், எனக்கென்று ஒரு தேவன்.
அங்கே உண்டு. அதை நான் வாஞ்சிக்கிறேன்.
இவ்வுலக பெருமைகளெல்லாம் என்னை விட்டு நீங்கிப் போவதாக.
ஆவியானவர் என்னை தாழ்மையுள்ளவனாக மாற்றி வாழச் செய்யும்.
என் மேட்டிமையான எண்ணமெல்லாம் அழிந்து போவதாக.
பரிசுத்தத்தில் விளங்கி மேன்மையடைய என்னை மாற்றி அமைத்திடும்.
இராஜா, என்னை மறைத்து என்னிலிருந்து நீரே வெளிப்பட வேண்டுகிறேன்.
இனி நானல்ல, என்னில் இயேசுவே ஜீவிக்கின்றார்.
என்னுடையது என்னுடையதல்ல இனி யாவும் இயேசுவுக்கே சொந்தம்.
என் தாலந்துகள் யாவற்றையும் எனக்கானதல்ல, அவருக்கே சொந்தம்.
பிரியமானதும் உம் சித்தமானதுமான பொருளாய் என்னை மாற்றுமே.
சுத்த இருதயமுள்ளவனாக என்னை மாற்றி பரிசுத்தப்படுத்துமே.
ஆகாத காரியங்கள் யாவற்றையும் என்னை விட்டு அகற்றிடும்.
உமக்கு உகந்த காணிக்கையாக என்னையே தந்து விட்டேன்.
இனி இருளுக்கும் எனக்கும் எள்ளளவும் தொடர்பு இல்லை.
இனி பாவத்திற்கும் எனக்கும் தொடர்பு ஏதும் இல்லை.
இனியென்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தேன். நீரே பார்த்துக்கொள்ளும்.
என் ஆயுள் நாட்கள் யாவும் பரலோகத்தின் வாழ்வுக்காய் காத்திருப்பேன்
விசுவாசத்தில் தலைசிறந்த பாத்திரமாய் மாற ஏங்கி நிற்பேன்.
உம்முடைய இராஜ்யத்தின் வாசலில் நான் காத்திருப்பேன்.
இயேசுவே, என்னை எடுத்துக் கொள்ளும். என்னை கொண்டு செல்லும் ஐயா

26 AUG 2008

இயேசுவே, என் மனம் தளர்ந்து போகும் போதெல்லாம் நீரே எனக்கு பெலன்.
மனிதர் மத்தியில் எனக்கு துணை இல்லாதிருக்கும் போதெல்லாம் நீரே என்னை அணைத்துக் காத்தீர்.
இயேசுவே. நீர் வாழ்க என்று வாழ்த்திக் கொண்டே போற்றி ஆர்ப்பரிப்பேன்
உம்மையன்றி எனக்கு யாதொன்றும் இல்லை நீரே எந்தன் தெய்வம்
எனக்கு புதுப் பெலனைத் தந்து புதுப்பொலிவினைத் தந்திடும்
இனி நானல்ல என்னில் நீரே வாழ்ந்திருக்கின்றீர் என் உயிரான இயேசு
என் உயிரோடு நீரே கலந்திருக்கின்றீர், என்னோடு வாழ்கின்றீர்
வழித்துணையும் நீரே வழிகாட்டியும் நீரே வாழ்வும் நீரே
உமக்காக என்னை அர்ப்பணித்தேன் என்னை அரவணைத்திடு
என் ஆவிக்கு சந்தோஷத்தையும். ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலையும் தருகிறீர்
என் இருதயத்திற்கு மகிழ்ச்சியையும் கண்களுக்கு வெளிச்சத்தையும் தருகிறீர்
உம்மைப் போல யாருமில்லை என்னை நேசிப்பதற்கு
உம்மைப் போல யாருமில்லை என்னை தாங்குவதற்கு
உம்மைப் போல யாருமில்லை என்னை உயர்த்துவதற்கு
என்னை எடுத்துக்கொள்ளும் என்னை வைத்துக்கொள்ளும்
பரலோக இராஜ்ஜியத்தை என் கண்களுக்கு காட்டியருளும்
வல்லமையோடு வாழச் செய்யும் சாத்தானோடு ஜெயிக்கச் செய்யும்
இடங்களில் நிற்கச் செய்யும் என் நெற்றியில் உம் நாமத்தை தாரும்
இராஜ்ஜியத்தின் மறைக்கப்பட்ட இரகசியங்களை வெளிப்படுத்தும்
என்னோடு கூட நடந்திடும் ஏனோக்கைப் போல மறைத்திடும்
எலியாவைப் போல என்னை எடுத்துக்கொள்ளும். காணச்செய்யும்
இயேசு இராஜாவைப் போல பரிசுத்தமாய் ஜீவிக்க வையும்.
பசுமையான புல்வெளியில் என்னை நடத்திச் செல்லும்,
சூரியனைப் போல பளிச்சென்று பிரகாசிக்கச் செய்யும்.
தரித்திரத்தை என்னைவிட்டகற்றி ஐசுவரியவானாக என்னை மாற்றிடும்
உமக்கே என்னை அர்ப்பணித்தேன் உமக்கே என்னை ஜீவபலியாக்கினேன்
பரிசுத்தமாய் நான் வாழ என்னை இப்பொழுதும் எப்பொழுதும் பரிசுத்தம் செய்யும்
சேனைகளின் கர்த்தராம் என் பரிசுத்தர் நீரே என் தெய்வமாய் இரும்.
அந்நியர் என்னை உம்மைப்பற்றி வினாவும்போது நீரே வெளிப்படும்
சந்தேகம் வரும் போதெல்லாம் தேவா நீரே அதனைத் தீர்த்திடும்
பரலோக இராஜ்ஜியம் எனக்கு வேண்டும் தந்திடும்
பரலோகத்தின் இன்பங்கள் எனக்கு வேண்டும் கொடுத்திடும்
பரலோக தரிசனங்கள் எனக்கு வேண்டும் காண்பியும்
பரலோகத்தில் ஓர் இடம் வேண்டும் சீக்கிரமாய் தந்தருளும்
சேனைகளின் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என் இராஜா
என்று முழங்க எனக்கு கிருபை செய்தருளும்.
நன்றி. உம்மை எனக்கு வெளிப்படுத்தும். ஆமென்.

27 AUG 2008

இயேசுவே, என் நினைவெல்லாம் நீரே என்னை ஆளுகின்றீர்
கண்கள் மூடும் போதெல்லாம் என் முகத்தில் உம்மை உறைச்செய்கின்றீர்.
என் ஆவியை வலுப்படுத்தி அதை பரிசுத்தப்படுத்தி திடப்படுத்துகிறீர்
என் ஆவியின் தாகத்தை உமது ஜீவ நதியால் தீர்க்கின்றீர்
என் ஆவியின் தேகத்தை உமது பரிசுத்த ஆவியால் நிரப்புகின்றீர்
உம் அக்கினியின் வெப்பத்தால் என் ஆவிக்கு உயிரைத் தருகின்றீர்
உம் பனித்துளியின் இனிமையால் என் ஆவிக்கு இளைப்பை தருகின்றீர்
அப்பா என்றழைக்கும் பாக்கியம் எனக்கு தந்தீர். உம்
ஆவியிலே என்னை உம்மகனாய் மீண்டும் பிறக்கச் செய்தீர் நன்றி,
ஆவியிலே உம்மைத் துதிக்க வைக்கின்றீர் நன்றி.
ஆவியிலே உம்மை ஜெபிக்க வைக்கின்றீர் நன்றி.
ஆவியிலே உம்மை ஆராதிக்க வைக்கின்றீர் நன்றி.
ஆவியிலே உம்மோடு பேசச் செய்கின்றீர் நன்றி.
ஆவியிலே உம்மை பாட வைக்கின்றீர் நன்றி.
ஆவியிலே என்னை நடக்கச் செய்கின்றீர் நன்றி.
ஆவியிலே என்னை ஜெயிக்கச் செய்கின்றீர் நன்றி.
ஆவியிலே என்னை பிழைக்க வைத்துள்ளீர் நன்றி.
ஆவிக்குள்ளாகச் செய்கின்றீர் அபிஷேகப்படுத்துகின்றீர் நன்றி.
அசுத்த இரத்தத்தை நீக்கி புது இரத்தத்தால் நிரப்புகின்றீர் நன்றி.
அசுத்த பாவத்தை நீக்கி புது கிருபை வரத்தால் என்னை ஆசீர்வதித்தீர் நன்றி.
ஆண்டவரே, உமது ஆலோசனை எனக்கு வேண்டும்.
அப்பா பிதாவே உம்முடைய சித்தப்படி என்னை நடத்த வேண்டும்.
பரிசுத்தமான வாழ்க்கை வாழ செய்யும் பரிசுத்த பிள்ளையாக மாற்றிடும்.
என் குறை வயதிலே என்னை பரிபூரணமடைந்தவனாய் விளங்கச் செய்யும்.
என் குடும்பத்தின் ஆசீர்வாதங்களை சீக்கிரமாய் விளங்கச் செய்யும்.
என் எதிரிகளை சீக்கிரமாய் என் கண்கள் காணச் செய்யும்.
என்னிலே இன்னும் உமது வாக்குத்தத்தங்கள் சீக்கிரமாய் நிறைவேறட்டும்.
என் விசுவாசம் ஆபிரகாமின் விசுவாசத்தைக் காட்டிலும் அதிகமாக்கும்.
என் நம்பிக்கை தாவீதின் நம்பிக்கையைக் காட்டிலும் அதிகமாக்கும்.
என் சுபாவத்தை மாற்றி பரிசுத்த சுபாவத்தை கொடுத்து மகிமைப்படுத்தும்.
தேவனே, உம்முடைய கிருபையை என்னை விட்டு விலக்காதிரும்.
உமக்கென்று வாழ பிரித்தெடுத்து உமக்கு சொந்தமாய் மாற்றும்.
மாம்சத்தின் கிரியைகளையெல்லாம் பாவம் இல்லாமல் தடுக்கின்றதே
ஆவியின்படி பரிசுத்த மகனாக என்னை மாற்றிடுமே.
வாழ்க வாழ்க என வாழ்த்தி போற்றுவேன்,
இயேசுவே, நீரே என் தேவன். உடன்படிக்கையின் இராஜா.
எனக்குள்ளே வாசம் செய்யும் என்றென்றும் என்னை ஆளுகை செய்யும்.
ஆமென்.

28 [illegible]

இறைவா, உம்முடைய வல்லமையின் மகிமையால் என்னை மூடிக்கொள்ளும்
உம்முடைய பலத்த புயத்தினால் என்னை தாங்கிக் கொள்ளும்
உம்முடைய சத்திய வசனங்களினால் என் இருதயத்தில் அதை எழுதிடும்
உம்முடைய பரிசுத்த ஆவியானால் என்னை தினந்தோறும் பரிசுத்தம் செய்திடும்
உம்முடைய இனிமையாக்கும் வல்லமையினால் என்னை நிறைந்திடும்
உம்முடைய காயம் கட்டும் வார்த்தைகளினால் என்னை அலங்கரியும்
என்னுடைய கனிகளால் நானும்மை அலங்கரிக்க உதவி செய்யும்
எப்போதும் எவ்வாவற்றிலேயும் உம்மையே சார்ந்திருக்கும் இதயத்தை தந்திடும்
உம்மையே நான் நம்பிக்கொண்டிருக்கிறேன். உம்மையே நான் தேடுகிறேன்
என் நம்பிக்கை ஒருக்காலும் வீண்போகாதபடி செய்திடும் இறைவா,
நான் ஒருக்காலும் ஒரு மனிதன் முன்பாகிலும் வெட்கப்பட்டு போகாதபடி
செய்து, தலை நிமிர்ந்து தைரியம் கொண்டவனாய் நடக்கச் செய்யும்.
என் தலை எப்பொழுதும் குனிந்தே கிடக்கிறது, வெட்கப்படுகிறது.
அதை மாற்றி, என் தலையை உயர்த்தி சிறக்கச் செய்திடும்.
இயேசுவே, என்னில் நீரே வெளிப்பட்டு உம்முடைய கிரியைகளை நடப்பியும்
என் இராஜாவே, எத்தனையோ வாழ்க்கையுண்டு சுகபோக வாழ்வு உண்டு
அதெல்லாம் அனுபவிக்க எனக்கு தகுதியில்லை, கையில் காசும் இல்லை
ஆனாலும் உம்மிடத்தில் எனக்கு ஆறுதலும் சமாதானமும் உண்டு.
அதுவே எனக்கு போதும். அது தானே மெய்யானதே எனக்கு வேண்டும்.
தினந்தோறும் எனக்கு உமது புதுக்கிருபையாய் வல்லமை தந்திடும்.
என் மாம்சத்தின் படி நான் நடக்காமல் ஆவியின் படி நடக்கச் செய்திடும்.
என் சித்தப்படி நான் நடக்காமல் பிதாவின் சித்தப்படி நடக்கச் செய்திடும்.
எனக்குள்ளே ஆபிரகாமின் விசுவாசத்தை கொடுத்து பரிபூரணமாக்கிடும்.
என்னுள்ளே யாக்கோபும், ஈசாக்கும் வாக்குத்தத்தமானதை கொடுத்திடும்.
யூதாவின் இராஜாவே, யூதா கோத்திரத்து சிங்கமே தாவீதின் வேரானவரே
நீர் என் தேவன். நான் யாருக்கும் உம்மை விட்டுக்கொடுக்க மாட்டேன்.
நீர் என்னுடையவர், நீர் எனக்கு அப்பா, நீரே எனக்கு தெய்வம்
உம்மையன்றி எனக்கு வேறெதுவும் தெய்வமில்லை.
நீரே, நீரே, நீரே என் இரட்சகர் என் மீட்பர் என் இராஜா
நான் உமது பிள்ளை அதை நான் மட்டும் சொல்வானேன்.
என் இயேசுவே என்னை உமது பிள்ளை என்று அழைத்திடும்.
என்னை உமது மகன் என்று அழைத்து மகிழச் செய்யும்
என்னை ஏற்றுக்கொள்ளும் என்னை தாங்கிக் கொள்ளும்
உம் விருப்பம் நிறைவாக்க என்னை நித்தியத்திற்கென சேர்த்துக்கொள்ளும்
அதனை என் அப்பா இயேசு கிறிஸ்து அன்றைக்கு
அலங்கோலமாகி சிலுவையிலே அணியழிக்கப்பட்டு அறையப்பட்டார்.
என்னுடைய பாவங்களும் அதுபோல அல்ல இயேசுவே, மன்னியுமென். ஆமென்

30 AUG 2008

என் இயேசுவுக்கு ஆயுளே என்றும் மகிமையானவரே உமக்கே ஆராதனை.
என் நினைவுகளையெல்லாம் ஆட்சி செய்து ஆசீர்வதிப்பவரே உமக்கே ஸ்தோத்திரம்.
என் உடலில் இருந்து பரிசுத்தமாய் நீங்கச் செய்பவரே உமக்கே ஆராதனை.
என் ஆவியின் தாகத்தை தினந்தோறும் தீர்ப்பவரே உமக்கே ஆராதனை.
என் ஆத்துமாவின் தாகத்தையும் தினந்தோறும் தீர்ப்பவரே உமக்கே ஆராதனை.
என் உயிருக்கும் மேலான உமது நாமத்தை எனக்கு தந்தீரே உமக்கே ஆராதனை.
என்னோடு நண்பனைப்போல பழகுகிறீரே உமக்கே ஆராதனை.
என் தாய் தகப்பனைப் போல தாங்கி என்னை பாதுகாக்கின்றீரே உமக்கே ஆராதனை.
அப்பா பிதாவே அப்பா உம்மை அன்பினால் நான் ஆராதிப்பேன்.
என் முழுமனதோடும் உம்மை அன்பு செய்வேன். என் இதயத்தோடும் அன்பு செய்வேன்.
என் நடத்தையாலும் உம்மை அன்பு செய்வேன். என் கிரியைகளாலும் அன்பு செய்வேன்.
விசுவாசத்தினாலும் உம்மை அன்பு செய்வேன். என் ஆவியினாலும் அன்பு செய்வேன்.
இறைவா, உம்முடையவன் நான் உமக்கே உரியவன் நான்
என் சாந்தத்தை மேன்மேலும் அதிகமாக்கும் இன்னும் பொறுமையைத் தாரும்.
உண்மையில் இன்னும் நல்ல குணங்களை இன்னும் அதிகமாக்கும்.
இயேசுவே, உம்முடைய குணங்களை எனக்கு காண்பித்தருளும்,
இயேசுவே, அதையே எனது வழியாக கொடுத்து விடும்.
உம்மை நேசிக்கின்றேன். உம்முடைய வீட்டை நான் நேசிக்கின்றேன்.
உம்முடையவற்றை நான் நேசிக்கின்றேன். உம் பரிசுத்தத்தை நான் நேசிக்கின்றேன்.
உம் ஐஸ்வரியத்தை நான் நேசிக்கின்றேன். உம் வார்த்தைகளையும் நேசிக்கின்றேன்.
என்னுடைய தேவாதி தேவனாம் இராஜாதி இராஜனாம் நீர் வாழ்க.
எப்பொழுதும் உமது நாமத்தை உயர்த்திப் போற்றிப் பாடுவேன்
என்றும் உமது நாமத்தை ஆராதித்து மகிழ்ந்து களிகூருவேன்.
ஒருவேளை பேதுருவைப் போல நான் மறுதலிப்பேனோ? நான் அறியேன்.
ஆனாலும் அவ்வாறு இல்லாதபடி எனக்கு செய்தருளும்.
என் தேவன் நீர் ஜீவனுள்ளவர். நீர் என்னை இழுத்துக்கொண்டீர்
உமது கிருபையால் நான் பிழைத்துக்கொண்டேன் என்றும் பிழைத்திருப்பேன்.
மரித்தாலும் மீண்டும் உயிர்பெற்று எழுந்திருப்பேன்.
என் சொந்த தேசம் எனக்காய் காத்துக் கொண்டிருக்கிறது.
ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் சேர்ந்துக் கொள்வேன்.
பெரிய தீர்க்கதரிசிகளின் சபையிலே நானும் சேர்ந்துக் கொள்வேன்.
அப்போஸ்தலர்களின் பந்தியிலே நானும் அமர்ந்து போஜனம் செய்வேன்.
தேவன் திரையை உடைக்கும் பொழுது அவரை ஆராதனை செய்வேன்.
ஏனோக்கோடும், எலியாவோடும் சேர்ந்து இயேசுவை துதிப்பேன்.
பரலோகத்தின் பொக்கிஷங்களை தேவதூதர்களோடு காண்பேன்.
எனக்கென்று ஒரு நாள் உண்டு. அந்நாளை நான் காத்திருக்கின்றேன்.
இயேசுவே, சீக்கிரமாய் என்னை எடுத்துக்கொள்ளும். ஆமென்.

31 AUG 2008

இயேசுவே. நீர் எத்தனை அருமையான தெய்வம்.
உம்மிடத்தில் என்ன குறையுண்டு? ஏன் ஜனங்கள் உம்மை வெறுக்கின்றார்கள்?
உம்மிடத்தில் என்ன பழுதையுண்டு? ஏன் ஜனங்கள் உம்மை ஏற்றுக்கொள்வதில்லை?
உம்மிடத்தில் என்ன மாசு உண்டு? ஏன் ஜனங்கள் அசுத்தம் செய்கின்றனர்?
உம்மிடத்தில் யாது தந்திரம் உண்டு? ஏன் ஜனங்கள் தாகமாக இருப்பதில்லை?
எனக்காக யாவையும் செய்து முடித்தவரே? நீர் யாவருக்கும் செய்து முடித்தீரே?
என்னுடைய தேவன் நீர் தானே? நீரே யாவருக்கும் ஆண்டவர் தானே?
உம்முடைய இரக்கத்தின் ஐசுவரியத்தினால் என்னையும் யாவரையும் பிழைக்கச் செய்தீரே!
உம்மை எப்படி நான் பாடித் துதிப்பேன்? என்ன சொல்லி ஆராதிப்பேன்?
உம்முடைய பரிசுத்தங்கள் யாவருக்கும் தந்து மகிமைப்படுத்தினீர்.
உம்முடைய அடியானவரின் வரங்களையும் யாவருக்கும் தந்து ஆசீர் செய்தீர்.
உம்முடைய இருதயத்திலே ஏதொரு குறையையும் நான் காணவில்லை.
உம்மிடத்தில் அநீதி இல்லை, வறுமை இல்லை, கஷ்டம் இல்லை
ஏதொரு இருளும் இல்லை, ஏதொரு மாசும் இல்லை.
அப்பா, என் இராஜனே, என்னை பரிசுத்தப்படுத்தி தூய்மையாக்கும்.
தகப்பனே, உம்மைப் போற்றிப் பாட வார்த்தையில் பரிசுத்தத்தை தாரும்.
தெய்வமே, உம்மைப் போற்றித் துதிக்க புது வார்த்தையை தாருமே.
நான் உம்முடைய பிரசன்னத்திற்காக ஏங்கி தவிக்கின்றேன்.
நான் தாகமாய் ஏங்கி ஏங்கி காத்துக்கொண்டு இருக்கிறேன்.
என்னை உம் கையில் ஒப்புக்கொடுத்தேன் தாங்கிக் கொள்ள வேண்டுகிறேன்.
இராஜா, எனக்குரியவர் நீர், யாவருக்கும் இரக்கம் செய்பவர் நீர்?
என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நீரோ சகலத்தையும் செய்ய வல்லவர்.
என்னால் ஒரு துரும்பையாவது படைக்க முடியாது. நீரோ அனைத்தையும் படைத்தீர்.
உம்முடைய வல்லமையும் மகிமையும் பூமி காண்பதாக.
உம்முடைய நாமமும் அதின் அர்த்தமும் பூமி அறிந்துக்கொள்வதாக.
உம்முடைய அன்பையும், மகா இரக்கத்தையும் பூமி உணர்ந்துக்கொள்வதாக.
இறைவா, உம்முடைய இராஜ்யமே வருவதற்காக நன்றி.
இராஜ்யத்திற்கு உரிய பிள்ளைகளை அதனிலிருந்து தள்ளி,
புற ஜாதியைச் சேர்ந்தவனான எனக்கும் மற்றவர்களுக்கும் தந்தீரே நன்றி.
உம்முடைய பாத்திரத்தில் என்னை பானம் செய்ய அனுமதித்தீர். நன்றி.
எனக்குரியவரான என் தேவனே எனக்கே நீர் உரியவர்.
உம்மேல் என் விசுவாசம் அதிகமாகிக் கொண்டே போகட்டும்.
உம்மேல் என் நம்பிக்கை வீண் போகாமல் இருக்கட்டும்.
உம்மிடத்தில் எனக்கு ஆறுதலும், மனமகிழ்ச்சியும் உண்டு.
எனக்கு பெலத்தை தாரும். எனக்கு சுகத்தை தாரும்.
எனக்கு உம் வார்த்தையைத் தாரும், எனக்கு உம் சத்தியத்தைத் தாரும்,
இயேசுவே என்னை உமக்கு என்னையே தந்தேன். ஆமென்.

Redemption from the Ruins

கடவுளின் ஒருமை—பிதா, மகன்,
பரிசுத்த ஆவி—பாழடைந்த
இடங்களில் மீட்பைப் பொழிந்து,
இழப்பை மறுசீரமைப்பாக மாற்றுகின்றனர்.

